பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

30 06 2024 **SUNDAY** **7.15 PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்திய கலாச்சாரத்தின் பெருமை உலகம் முழுவதும் பரவி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தமது, மன் கி பாத் உரையில் குறிப்பிட்டுள்ளார்.

2. ராணுவ தலைமை தளபதி ஜென்ரல் மனோஜ் பாண்டே இன்று ஓய்வு பெற்றார். புதிய தலைமை தளபதியாக ஜென்ரல் உபேந்திர திவேதி பொறுப்பேற்றுக்கொண்டார்.

3. மூன்று புதிய குற்றவியல் நடைமுறை சட்டங்கள் நாளை அமலுக்கு வருகின்றன.

4. நைஜீரியாவில் நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர்.

5. இந்தியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டநேர இறுதியில் தென்னாப்பிரிக்கா 2 விக்கெட் இழப்புக்கு, 232 ரன் எடுத்துள்ளது.

--- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>>>

மக்களவைத் தேர்தலில் ஜனநாயக கட்டமைப்பு மற்றும் அரசியல் சாசனத்தின்மீது உள்ள அசைக்க முடியாத நம்பிக்கையை மக்கள் மீண்டும் உறுதி செய்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மன்-கி-பாத் நிகழ்ச்சியில் நாட்டு மக்களிடையே உரையாற்றிய பிரதமர், இந்த தேர்தலை வெற்றிகரமாக நடத்தி முடித்த தேர்தல் ஆணையத்துக்கும், நாட்டு மக்கள் ஒவ்வொருவருக்கும் தமது பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவிப்பதாக கூறினார்.

சுதந்திர போராட்டக்காலத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக ஜார்கண்ட் மாநிலத்தை சேர்ந்த பழங்குடியின சகோதரர்கள் தீவிரமாக மேற்கொண்ட போராட்டத்தை நினைவுகூறும் வகையில் இன்றைய தினம் ஹூல் தினமாக கொண்டாடப்படுவதாக அவர் கூறினார்.

உலக சுற்றுச்சூழல் தினத்தன்று அன்னையின் பெயரில் ஒரு மரம் என்ற இயக்கத்தை தாம் தொடங்கியுள்ளதாக குறிப்பிட்ட பிரதமர், தாமும் தமது அன்னையின் பெயரில் மரத்தை நட்டதாக தெரிவித்தார்.

**Plant 4 Mother** என்ற **Hashtag** வாயிலாக சமூக வலைதளங்களில் மக்கள் பதிவிட்டு வருவதாக அவர் கூறினார்.

தாய் மண்ணை காக்க வேண்டும் என்ற உணர்வை மக்களிடையே விதைக்கும் ஒரு வாய்ப்பாக இதனை தாம் கருதுவதாகவும் பிரதமர் மோடி கூறினார்.

பருவமழை காலத்தில் குடை நமது வீடுகளில் அத்தியாவசியப் பொருளாக உள்ளது என்று கூறிய பிரதமர், கேரள மாநிலத்தில் உள்ள அட்டப்பானியில் "கார்தும்பி குடை" என்ற வண்ணமயமான குடைகள் பழங்குடியின மக்களால் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதை சுட்டிக்காட்டினார்.

கூட்டுறவு வேளாண் அமைப்புகள் மூலம், பழங்குடியின பெண்கள் இதனை விற்பனை செய்து வருவதாகவும் அவர் கூறினார்.

கேரள மாநிலத்தின் சின்ன கிராமத்தில் இருந்து கார்தும்பி குடைகள் மூலம் பழங்குடியின மக்கள் தங்களுடைய கலாச்சாரத்தையும், பண்பாட்டையும் மற்றவர்களுக்கு எடுத்துக்கூறி இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூர் பொருட்களுக்கு குரல் கொடுப்போம் என்ற நமது முழக்கத்திற்கு இதைவிட சிறப்பான எடுத்துக்காட்டு இருக்க முடியாது என்றும் பிரதமர் தமது மன் கி பாத் உரையில் கூறினார்.

குவைத் அரசாங்கம் தனது தேசிய அலைவரிசையில் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அரைமணிநேர இந்தி சிறப்பு நிகழ்ச்சிக்கு ஒதுக்கியுள்ளதை பிரதமர் குறிப்பிட்டார்.

இந்திய திரைப்படங்கள், கலந்துரையாடல்கள், நாட்டின் கலை மற்றும் இந்திய சமூகத்தினர் குறித்த பல்வேறு தகவல்கள் இதில் ஒலிபரப்பப்படுவதாகவும் அவர் கூறினார்.

குவைத் அரசாங்கத்தின் இந்த முன் முயற்சிக்கும், அந்நாட்டு மக்களுக்கும் தமது நன்றியை தெரிவித்துக்கொள்வதாகவும் அவர் கூறினார்.

இந்திய கலாச்சாரத்தின் பெருமை உலகம் முழுவதும் பரவி வருவதாக கூறிய பிரதமர், துர்க்மெனிஸ்தானில் நடைபெற்ற விழாவில் அந்நாட்டு அதிபர் 24 தலைசிறந்த கவிஞர்களின் சிலைகளை திறந்துவைத்ததையும் அதில் தேசிய கவி குரு ரவீந்திரநாத் தாகூரின் சிலையும் இடம்பெற்றிருப்பது நமக்கு பெருமை சேர்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இம்மாதத்தில் 10-ஆவது சர்வதேச யோகா தினத்தை உலகெங்கிலும் உற்சாகத்தோடு கொண்டாடியதை நினைவுகூர்ந்த பிரதமர், சவுதி அரேபியாவில் முதல் முறையாக **Al Hanouf Saad Ji** என்ற பெண்மணி யோக கலையை நெறிமுறை தவறாது முன்நின்று நடத்தியதையும் குறிப்பிட்டார்.

மன் கி பாத் நிகழ்ச்சி வாயிலாக மக்களோடு இணைந்து பயணிப்பது மகிழ்ச்சி அளிப்பதாக பிரதமர் தெரிவித்தார்.

வரும் நாட்களிலும் நாட்டின் வளமான கலாச்சாரம், வரலாறு மற்றும் வளர்ச்சிக்கான முயற்சிகள் குறித்த தகவல்கள் இந்நிகழ்ச்சி தொடரும் என்றும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

பிரதமர் ஆற்றிய உரையின் முழு தமிழாக்கம் சென்னை அகில இந்திய வானொலியில் இன்றிரவு 8 மணிக்கு மறுஒலிபரப்பு செய்யப்படுகிறது.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் இதனை அஞ்சல் செய்யும்.

<<<<<<>>>>>>>

ராணுவ தலைமை தளபதி ஜெனரல் மனோஜ் பாண்டே, இன்று ஓய்வு பெற்றார்.

சுமார் 40 ஆண்டுகள் ராணுவத்தில் சிறப்பாக சேவையாற்றிய அவரின் அர்ப்பணிப்பு மிக்க சேவை போற்றுதலுக்குரியது என்று பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மற்றும் மேற்கு எல்லை பாதுகாப்பிற்கு அவர் முன்னுரிமை அளித்தார் என்றும், ஜம்மு காஷ்மீர், லடாக் உள்ளிட்ட பகுதிகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் அவர் மேற்கொண்டார் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

ராணுவ தளவாடங்களை உள்நாட்டிலேயே சுயசார்பு இந்தியா இயக்கத்தின்கீழ், உற்பத்தி செய்வதற்கான திட்டத்தை திறம்பட நடைமுறைக்கு கொண்டுவந்தவர் மனோஜ் பாண்டே என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனோஜ் பாண்டே சிறப்பாக சேவையாற்றியதற்காக பரம் விஷிஷ்ட் சேவா உள்ளிட்ட உயரிய விருதுகளை பெற்றுள்ளார்.

ஜெனரல் மனோஜ் பாண்டே ஓய்வுபெற்றதையடுத்து நாட்டின் 30-ஆவது ராணுவ தலைமை தளபதியாக ஜெனரல் உபேந்திர திவேதி இன்று பொறுப்பேற்றுக்கொண்டார்.

ஜம்மு காஷ்மீர் ரைபிளஸ் படைப்பிரிவில் 1984-ல் சேர்ந்த உபேந்திர திவேதி, வடக்கு, கிழக்கு மற்றும் மேற்கு மாநிலங்களில் தனித்துவம் மிக்க பாதுகாப்புப்பணிகளை மேற்கொண்டுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<<<>>>>>>>

நாடு முழுவதும் புதிதாக கொண்டுவரப்பட்டுள்ள மூன்று குற்றவியல் நடைமுறை சட்டங்கள் நாளை அமலுக்கு வருகிறது.

பாரதீய நியாய சன்ஹிதா, பாரதீய நகஹரிக் சுரக்ஷா சன்ஹிதா, பாரதீய சாஷ்ஷிய அதினியம் ஆகிய இந்த மூன்று குற்றவியல் நடைமுறை சட்டங்களையும் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் நடைமுறைக்கு கொண்டுவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

இந்த சட்டங்கள் குறித்த விழிப்புணர்வை அனைத்துத்தரப்பினரிடையேயும் ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டது.

காவல்துறையினர் மற்றும் புலனாய்வு அமைப்பினர் இந்த சட்டங்களை திறம்பட கையாளுவதற்கான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆகாஷவாணி மற்றும் தூர்தர்ஷன், சமூக வலைதளங்கள் மூலமாகவும் இந்த சட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.

<<<<<<>>>>>>>

தமிழகத்தில் மூவாயிரம் ஆண்டுகள் பழமையான சங்கு வளையல் மற்றும் பெண்கள் கழுத்தில் அணியும் சுடுமண்ணால்-ஆன பதக்கம் அகழாய்வின்போது கண்டெடுக்கப்பட்டுள்ளது.

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் அருகே வெம்பக்கோட்டையில் நடைபெற்று வரும் மூன்றாம் கட்ட அகழாய்வில் இப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>>

தமிழகத்தில் அடுத்த இரண்டு நாட்களுக்குமிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>>>

நைஜீரியாவின் வடகிழக்கு மாகாணமான போர்னோவில் நடத்தப்பட்ட தற்கொலைப்படை தாக்குதலில் 18 பேர் உயிரிழந்தனர். 40-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதல் மூன்று இடங்களில் நடத்தப்பட்டதாக போர்னோ மாகாணத்தின் அவசரகால நிர்வாக அமைப்பின் தலைமை இயக்குனர் தெரிவித்துள்ளார்.

திருமண நிகழ்ச்சி ஒன்றிலும், அரசு மருத்துவமனையிலும், வாகன நிறுத்தத்திலும் இந்த குண்டுவெடிப்பு நிகழ்த்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் பெண்கள் தற்கொலைப்படை தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார்.

இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

<<<<<<>>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

இந்தியாவுக்கு எதிரான மகளிர் டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் இரண்டாவது இன்னிங்சில் தென்னாப்பிரிக்கா ஆட்டநேர இறுதியில் 232 ரன் எடுத்துள்ளது.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மூன்றாம் நாளான இன்று, 4 விக்கெட் இழப்புக்கு 236 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் முதல் இன்னிங்ஸை தொடர்ந்து ஆடிய தென்னாப்பிரிக்கா, 266 ரன்னுக்கு ஆட்டமிழந்து ஃபாலோஆனை பெற்றது.

இதனைத் தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை ஆடி வரும் தென்னாப்பிரிக்கா ஆட்டநேர இறுதியில் 2 விக்கெட் இழப்புக்கு 232 ரன் எடுத்துள்ளது.

இந்தியா முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட் இழப்புக்கு 603 ரன் எடுத்திருந்த நிலையில் ஆட்டத்தை முடித்துக் கொள்வதாக அறிவித்தது.

<<<<<<END>>>>>>>